# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 28 வெள்ளிக்கிழமை 12.09.2025 கதிர் 307









## விஜேராம இல்லத்தின் சாவிக் கொத்தை 7 நாட்களுக்குள் கையளிப்பார் மஹிந்த

### அவரின் ஊடகப் பேச்சாளர் மனோஜ் கமகே தகவல்

கொழும்பு, செப். 12

"சட்டத்துக்கு மதிப்பளித்து கொழும்பு - விஜேராம மாவத்தையில் உள்ள அரச இல்லத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ வெளியேறினார். இன்னும் ஒரு வார காலத்துக்குள் வீடு அதிகாரபூர்வமாக மீளக் கையளிக்கப்படும்." - என்று மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"முப்பது வருட காலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய தலைவருக்கு அரசு இப்படி நன்றிக் கடன் செலுத்துகின்றது என்பது மக்களுக்கு தற்போது புரிந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் இந்த

7

# அநுரவுக்கு மஹிந்த அஞ்சவில்லை! அவரது அரசியல் பயணம் தொடரும்!!

### இப்படி மொட்டுக் கட்சி சூளுரை





கொழும்பு, செப். 12

"இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த தலைவர். அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்த நாளில் கொழும்பை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். அவரின் அரசியல் பயணத்தை நிறுத்த முடியாது. அநுரவுக்கு மஹிந்த அஞ்சவில்லை." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

7



## எல்ல பஸ் விபத்து: சாவு எண்ணிக்கை 16 ஆக அதிகரிப்பு

பதுளை, செப். 12

எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் இம்மாதம் 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தங்காலை நகர சபையின் பெண் ஊழியர் இன்று வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தங்காலை நகர சபையில் கடமையாற்றிய 41 வயதுடைய பெண் ஊழியரே உயிரிழந்துள்ளார்.

எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலை, பண்டாரவளை மற்றும் தியத்தலாவை ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் தங்காலை நகர சபையில்

7

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் ஒருவர் சாவு!

மஸ்கெலியா, செப். 12

குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியா, புரவுன்ன்சீக் தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு நாட்களுக்கு

7



## ரணிலைச் சந்தித்த சீனத் தூதுவர்

கொழும்பு, செப். 12

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங் இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

7






## உள்ளக, கலப்புப் பொறிமுறையை முற்றாக நிராகரியுங்கள்!

### உறுப்பு நாடுகளிடம் புலம்பெயர் அமைப்புகள் கோரிக்கை

ஜெனிவா, செப். 12

இலங்கையில் நடந்த இனப்படுகொலை, மனித உரிமைகள் மீறல் என்பவற்றுக்கு நீதி - தீர்வு காண்பதற்கு உள்ளக மற்றும் கலப்புப் பொறிமுறையை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று 69 புலம்பெயர் தமிழர் அமைப்புகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்

7

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் நிதி முகாமைத்துவம் குறித்து ஹர்ஷவின் பதில்



கொழும்பு, செப் .12

ஒரு சுயாதீன நிறுவனமான இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணையக்குழுவின் நிதி முகாமைத்துவம் சுயாதீனமாக உள்ளதா? இல்லையா? என்பது குறித்து சிக்கல் நிலை காணப்படுவதாக பொது நிதிக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் காலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் வரவு செலவு மதிப்பீட்டைப் பற்றி கலந்துரையாடுவதற்காக பொது நிதிக் குழுவிற்கு அழைக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது கருத்துரைத்த ஹர்ஷ டி சில்வா,

"எனக்குத் தெரிந்தவரை, இங்கே ஒரு பெரிய சிக்கல் உள்ளது.

சுயாதீனம் என்றால் என்ன என்பதுதான் அடிப்படைப் பிரச்சினை.

நிதி நிர்வாகத்தில் ஒருவருக்கு சுயாதீனம் இல்லையென்றால், சுயாதீனம் எங்கே என்ற கேள்வி எழுகிறது.

இவர்களுக்கு உள்ளது அதிகாரத்தை எவ்வாறு அமுல்படுத்த வேண்டும் என்பது. எனவே தேவையான பணிக்குழாம் யார்...? அதை நியமிக்கவும்." என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க, ஆணைக்குழுவிற்கு அர்ப்பணிப்புள்ள பணியாளர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றாலும், சுமார் 2 ஆண்டுகளுக்குப் பிறகும் அதைச் செய்ய முடியவில்லை என்று கூறினார்.

அதன் பின்னர் உரையாற்றிய நிதியமைச்சின் பிரதிச் செயலாளர் ஏ.கே. செனவிரத்ன, ஹர்ஷ டி சில்வா கூறிய கருத்திற்கு அமைய இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் நிதி முகாமைத்துவம் சுயாதீனமாக உள்ளதா? இல்லையா? என்பது குறித்து சிக்கல் இருப்பதாகக் கூறினார். (ஐ)

# 91 பறவைகளுடன் 2 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, செப் .12

சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட 91 பறவைகளை ஏற்றிச் சென்ற டிங்கி படகுடன் 2 சந்தேக நபர்களையும் கடற்படை கைது செய்துள்ளது.

மன்னார், பேசாலை, சிரிதோப்பு கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட படகில் இருந்து 72 புறாக்களையும் 19 சேவல்களையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 17 மற்றும் 52 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் பேசாலை மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுடன் டிங்கி படகு மற்றும் பறவைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான புதிய கட்டணங்களை அறிவித்த பொலிஸ்

கொழும்பு, செப் .12

பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான திருத்தப்பட்ட கட்டண அமைப்பை இலங்கை பொலிஸ் வெளியிட்டுள்ளது.

இதன்படி, வெளிநாட்டு பயணம் மற்றும் தொடர்புடைய நிகழ்நேர சேவைகளுக்கான பொலிஸ் அனுமதி அறிக்கையைப் பெறுவதற்கு இப்போது 5,000 அறவிடப்படும்.

ஒளிபரப்பு அனுமதிகளுக்கான கட்டணம் கால அளவைப் பொறுத்தது: ஆறு மணி நேரம் வரை 500 ரூபாய், ஆறு முதல் பன்னிரண்டு மணி நேரம் 1,000 ரூபாய் மற்றும் பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேல் 2,000 ரூபாய்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான பிரதேச பொலிஸ் நிலையங்களால் வழங்கப்படும் பொலிஸ் அறிக்கைகளுக்கு 500 ரூபாய் வசூலிக்கப்படும்.

அதே நேரத்தில் உள்நாட்டு நோக்கங்களுக்காக பொறுப்பதிகாரியால் வழங்கப்படும் அறிக்கைகளுக்கு 300 ரூபாய் வசூலிக்கப்படும்.

முறைப்பாடுகளின் நகல்கள் ஒரு பிரதிக்கு 50 ரூபாய் என்ற கட்டணம் அறவிடப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



# பெண்களை அவமதிக்க இடமளிக்க முடியாது

ஆளும் தரப்பைச் சேர்ந்த பெண் எம்.பியான லக்மாலி ஹேமசந்திரவை அவமதிக்கும் வகையில் எதிர்க்கட்சி எம்.பியான பிரசாத் சிறிவர்தன, கருத்து தெரிவித்துள்ளார். இது ஒட்டுமொத்த பெண்களையும் அவமதிக்கும் செயல். பாராளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு பெண்களை அவமதிக்க இடமளிக்க முடியாது. எனவே சம்பந்தப்பட்ட எம்.பியை கடுமையாக எச்சரிக்க வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) அன்று விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதன் கிழமை (10) நடைபெற்ற அமர்வின் போது லக்மாலி ஹேமசந்திர எம்.பியை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்தார். இது முற்றிலும் முறையற்றது.

தென்னாசிய நாடுகளில் இலங்கையில் தான் பெண் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்பட்டது. இம்முறை தான் 22 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்கள். பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கின்ற நிலையில் தான் எதிர்க்கட்சியினர் பெண்களை அவமதிக்கும் வகையில் பேசுகிறார்கள். இதனை பெண்களுக்கு எதிரான வன்முறை ,அச்சுறுத்தல் என்றே குறிப்பிட வேண்டும்.

இந்த முறையற்ற கலாசாரத்தை தோற்கடிப்பதற்காகவே நாங்கள் முயற்சிக்கிறோம். லக்மாலி ஹேமசந்திரவை அவமதித்ததை ஒட்டுமொத்த பெண்களையும் அவமதித்ததாகக் கருத வேண்டும். ஆகவே பெண்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதற்கு இடமளிக்க முடியாது. பெண் பிரதிநிதிகளின் திறமைகள் ஆண் பிரதிநிதிகளால் சவாலுக்குட்படுத்தப்படுகின்றன . ஆகவே எதிர்க்கட்சிஎம்.பி.யின் முறையற்ற கருத்தை கடுமையாக எச்சரியுங்கள் என்றார்.

(ஐ)



# துறைசார் மேற்பார்வைக் குழுவால் துணைக் குழு நியமிப்பு!

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக இளைஞர் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ராஜபக்ஷ தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த உபகுழுவின் ஏனைய உறுப்பினர்களாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான சானக மாதுகொட, (சட்டத்தரணி) நிலூஷா லக்மாலி கமகே, கிரிஷ்ணன் கலைச்செல்வி, சுஜீவ திஸாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தலைமையில் கல்வி, ஊழியப்படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் (09) பாராளுமன்றத்தில் கூடியபோது இந்த உபகுழு நியமிக்கப்பட்டது. அதற்கமைய, இந்த உப குழு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக இளைஞர் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு எடுக்கக்கூடிய மிகவும் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடன் தேவையான கலந்துரையாடல்களை நடத்தி அறிக்கை வழங்கவுள்ளது.

நாட்டின் கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளுக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட நபர்களை நினைவுகூர்ந்த குழுவின் தலைவர், இளைஞர் சமூகத்திற்காக மேற்கொள்ளப்படும் இந்தத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் திட்டத்தை ஒரு தேசியத் திட்டமாகக் கருதி செயற்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

அத்துடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் செயற்படுத்தப்படும் இளைஞர் பாராளுமன்றத்தின் தற்போதைய நிலை குறித்து குழுவின் தலைவர் இதன்போது வினவினார். அதற்கமைய, இளைஞர் பாராளுமன்றம் தற்போது கலைக்கப்பட்டுவிட்டதாகவும், அடுத்த ஆண்டு மீண்டும் தேர்தல் நடத்தி ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர். இளைஞர் பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் செயன்முறை மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற வேண்டும் என்பதன் அவசியத்தை குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

இந்த கூட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான (சட்டத்தரணி) அஜித் பி. பெரேரா, (கலாநிதி) வி.எஸ். ராதாகிருஷ்ணன், கே. இளங்குமரன், கிரிஷ்ணன் கலைச்செல்வி, (சட்டத்தரணி) நிலூஷா லக்மாலி கமகே, சுகத் வசந்த டி சில்வா, சுஜீவ திஸாநாயக்க, சானக மாதுகொட, சஞ்சீவ ரணசிங்க, துரைராஜா ரவிகரன், மற்றும் சுனில் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# அன்று நாடாளுமன்றத்தை எரிக்க வந்தவர்கள் இன்று ஒழுக்கம் பற்றிப் பேசுகிறார்கள்!



கொழும்பு, செப் .12

அன்று நாடாளுமன்றத்தை எரிக்க வந்தவர்கள் இன்று ஒழுக்கம் பற்றிப் பேசுவது நகைச்சுவை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போராட்டக் காலத்தில் பாராளுமன்றத்தை சுற்றி வளைக்க வந்தவர்கள் இன்று டை, கோட் அணிந்துக் கொண்டு பாராளுமன்ற கௌரவம் மற்றும் ஜனநாயகம் பற்றி பேசுகிறார்கள்.

இவர்களுக்கு வெட்கமென்பது கிடையாது. இறந்து பிறந்தவர்களை போன்றே பேசுகிறார்கள். நேபாளம் நாட்டின் இன்றைய நிலையை பாருங்கள், ஜே.வி.பியினர் கூச்சலிடுவதை மக்கள் கண்டுகொள்ளப் போவதில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தியினருக்கு வீதியில் இறங்கிப் போக முடியாதவாறான நிலைமை உருவாகும் என்பதை மாத்திரம் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

சட்டமியற்றி முன்னாள் ஜனாதிபதிகளை அரச உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேற்றியுள்ளீர்கள். இவ்வாறான செயற்பாடுகளினால் மக்களுக்கு என்ன பயன் கிடைத்துள்ளது.

அரச செலவுகளை குறைத்துள்ளோம், அமைச்சுக்கான சம்பளம், நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளம் இரண்டில் ஒன்றையே பெறுவோம் என்று குறிப்பிட்டீர்கள்.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அமைச்சுக்கான சம்பளத்தையும் பெறுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தையும் பெறுகிறார்கள்.

பிரதி அமைச்சர் ஒருவரின் சம்பள விபரத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். பெயர் விபரங்களை பகிரங்கப்படுத்த போவதில்லை. ஏனெனில் அவர்களுக்கும் குடும்பம் உள்ளது. நாங்கள் உங்களை போன்று குறுகிய மனநிலையில் வைராக்கியத்துடன் செயற்பட போவதில்லை. என்றார்.

(ஐ)

# நாமலின் திருமணத்திற்கான மின்சாரக் கட்டணம் குறித்த மனுவை விசாரிக்க அனுமதி

கொழும்பு, செப் .12

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமணத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணத்தை இலங்கை மின்சார சபைக்கு சரியான நேரத்தில் செலுத்தத் தவறியதன் மூலம், இந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக தீர்ப்பளிக்கக் கோரி சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று (11) அனுமதியளித்தது.


இந்த மனுவை சட்டத்தரணி விஜித குமார தாக்கல் செய்துள்ளதுடன், அதில் பிரதிவாதிகளாக இலங்கை மின்சார சபை உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் பிரீதிபத்மன் சூரசேன மற்றும் நீதியரசர் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வெரகொட, நாமல் ராஜபக்ஷவின் திருமணத்திற்கான மின்சாரக் கட்டணத்தை இலங்கை மின்சார சபைக்கு சரியான நேரத்தில் செலுத்தத் தவறியது தொடர்பாக மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த மின்சாரக் கட்டணம் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டதால், இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒரே விடயம், சம்பந்தப்பட்ட நடவடிக்கை மூலம் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான அறிவிப்பு மட்டுமே என்று சட்டத்தரணி கூறினார். பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள், குறித்த மின்சாரக் கட்டணம் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த அமர்வு, மனுவை விசாரிக்க அனுமதி வழங்கியது.



முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் திருமணத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு இலங்கை மின்சார சபைக்கு 2 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பணம் செலுத்த வேண்டியிருந்தாலும், மின் கட்டணம் செலுத்தப்படவில்லை என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டிருந்தார். பின்னர் இந்த வழக்கைத் தாக்கல் செய்த பின்னரே குறித்த மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களின் சிறிய மின்சாரக் கட்டணம் கூட சரியான நேரத்தில் செலுத்தப்படவில்லை என்று கூறி, இலங்கை மின்சார சபை மின்சாரத்தைத் துண்டித்து வருவதாக சுட்டிக்காட்டிய மனுதாரர், இவ்வளவு பெரிய மின்சாரக் கட்டணத்தை சரியான நேரத்தில் வசூலிக்க நடவடிக்கை எடுக்காதது கடுமையான தவறு என்று கூறியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் இந்த அசாதாரண நடவடிக்கை மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்கக் கோரி சட்டத்தரணி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(ஐ)

# இந்தியாவின் 15 ஆவது குடியரசு துணைத் தலைவராக பதவியேற்றார் சி.பி.ராதாகிருஷ்ணன்



நாட்டின் 15ஆவது குடியரசு துணைத் தலைவராக சி.பி.ராதாகிருஷ்ணன் (67) பொறுப்பேற்றுக் கொண்டார். துணை ஜனாதிபதியாக இருந்த ஜெகதீப் தன்கர் கடந்த ஜூலை 21ம் தேதி பதவி விலகினார். இதைத் தொடர்ந்து, அடுத்த துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த 9ம் தேதி நடந்தது. இதில், பாஜ தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்ட மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் (67), இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் போட்டியிட்ட சுதர்சன் ரெட்டியை விட 152 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

இந்நிலையில் நாட்டின் 15ஆவது குடியரசு துணைத் தலைவராக சி.பி.ராதாகிருஷ்ணன் (67) பொறுப்பேற்றுக் கொண்டார். டெல்லி ஜனாதிபதி மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவராக சி.பி.ராதாகிருஷ்ணன் பொறுப்பேற்றார். சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு குடியரசு தலைவர் திரௌபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். குடியரசு துணைத் தலைவர் பதவியை அலங்கரிக்கும் 3ஆவது தமிழர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஆவார்.

பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா, எதிர்க்கட்சி தலைவர் கார்கே, முன்னாள் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், முன்னாள் குடியரசு துணைத் தலைவர்கள் வெங்கய்யா நாயுடு, ஹமீத் அன்சாரி உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை. (ஐ)

## “ஒன்றிய அரசின் இந்த முடிவால் சுற்றுச்சூழல் பேரழிவுக்கு ஆளாகும்” - தமிமுன் அன்சாரி



ஒன்றிய அரசின் இந்த முடிவால் சுற்றுச்சூழல் பேரழிவுக்கு ஆளாகும் என மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கனிம வளங்களை கண்டறிவதற்கும், அது தொடர்பாக சுரங்கங்களை தோண்டுவதற்கும் இனி பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப் போவதில்லை என ஒன்றிய பாஜக கூட்டணி அரசு முடிவு எடுத்திருப்பது அவர்களின் சுரண்டல் அரசியலை வெளிப்படுத்துகிறது.

இயற்கை வளங்களை வரம்பற்று கொள்ளையிடவும், இதற்காக உள்நாட்டு பெரு முதலாளிகளுக்கும், பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் தரகு வேலை செய்யவும் ஒன்றிய அரசு முடிவு எடுத்திருப்பது வெட்கக்கேடானது. இதனால் மலைவாழ் மக்களும், விவசாயிகளும் மட்டுமல்ல... சுற்றுச்சூழலும் பேரழிவுக்கு ஆளாகும். மலையக கார்ப்பரேட் திருடர்களுக்கு துணைப் போகும் இம்முடிவை, ஒன்றிய அரசு கைவிட வேண்டும்என மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க நபார்டு வங்கி கூட்டுறவுத்துறைக்கு ரூ.3,700 கோடி விடுவிப்பு



விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க நபார்டு வங்கி கூட்டுறவுத்துறைக்கு ரூ.3,700 கோடி விடுவித்தது. ரூ.8 ஆயிரம் கோடி கடனுதவி கோரப்பட்ட நிலையில் ரூ.3,700 கோடி விடுவிக்கப்பட்டதாக கூட்டுறவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகள் கடனுக்கான வட்டியை செலுத்த வேண்டியதில்லை.

இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி ரூ.2 லட்சம் வரை பிணையம் இல்லாமலும், ரூ.3 லட்சம் வரை பிணையம் பெற்றும் பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பயிர்க்கடனானது ரொக்கம் மற்றும் பொருள் பகுதியான உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் விதைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

கூட்டுறவுத்துறையின் வரலாற்றில் முதல்முறையாக 2023-24-ம் நிதியாண்டில் ரூ.15 ஆயிரம் கோடி என்ற மைல்கல்லை தாண்டி ரூ.15 ஆயிரத்து 543 கோடி வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 2024-25-ம் நிதியாண்டில் 17 லட்சத்து 37 ஆயிரத்து 460 விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரத்து 692 கோடி வழங்கப்பட்டு உள்ளது.

இதேபோன்று 2025-26-ம் நிதியாண்டுக்கும் ரூ.17 ஆயிரம் கோடி பயிர்க்கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளால் பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த ஆகஸ்டு மாதம் வரை ரூ.4 ஆயிரம் கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் வழங்கப்பட்ட பயிர்க்கடனைவிட ரூ.500 கோடி கூடுதலாகும்.

இவ்வாறு பயிர்க்கடன்கள் வழங்குவதற்கு உதவியாக இருக்கும் வகையில் கூட்டுறவுத்துறை சார்பில் தேசிய விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியிடம் (நபார்டு வங்கி) இருந்து குறைந்த வட்டிக்கு ரூ.8 ஆயிரம் கோடி கடனுதவி கோரப்பட்டது. அதற்கு நபார்டு வங்கியானது ரூ.3 ஆயிரத்து 700 கோடியை கூட்டுறவுத்துறைக்கு கடந்த வாரம் கடனாக விடுவித்து உள்ளதாக கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)




## ஓபிஎஸ்சிடம் பேசினேன் டிடிவியுடன் பேசுவேன் அதிமுகவை பாஜ உடைக்கிறதா? நயினார் பரபரப்பு பேட்டி

அதிமுகவை பாஜ உடைக்கிறதா என்ற கேள்விக்கு நயினார் பதிலளித்து உள்ளார். பாஜ மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன் மதுரை விமான நிலையத்தில் நேற்று அளித்த பேட்டி: அதிமுகவை பாஜ உடைக்க வேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் தான் இன்றைக்கு அவரை (எடப்பாடி) தலைவராக ஏற்று இருக்கிறோம். அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை சந்தித்ததாக சொல்லி இருக்கிறார். எனக்கு அதைப் பற்றி முழுமையாக தெரியாது. ஓபிஎஸ் கூட்டணிக்கு எந்த நிபந்தனையும் தெரிவிக்கவில்லை. எடப்பாடி முதல்வர் வேட்பாளராக இருக்கக்கூடாது என்பது டிடிவியின் சொந்த கருத்து.

ஓபிஎஸ்சிடம் எந்த நேரமும் பேச தயாராக உள்ளேன். யார் மீதும் எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அண்ணன் ஓபிஎஸ்சிடம் கண்டிப்பாக பேசுவேன். செங்கோட்டையன் ஒன்றிய அமைச்சர்களை சந்தித்ததால், எங்கள் கூட்டணிக்குள் எந்த வித இடர்பாடும் இல்லை. விஜய் சனிக்கிழமை பிரசாரம் செய்வது என்பதில் சனிக்கிழமை குறித்து உங்களுக்கு தெரியும். அதன் பிறகு நான் எதுவும் சொல்ல வேண்டாம். நான் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை. அதே நேரத்தில் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் உள்ளிட்டோர் என் மீது அளவற்ற அன்பும், பாசமும் வைத்திருக்கிறார்கள். கூட்டணி ஆட்சி விவகாரத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி என்ன சொல்கிறாரோ அதுதான் நிலைப்பாடு. இங்கு பிளவு என்பது கிடையாது. இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து, பரமக்குடி சென்று இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் அஞ்சலிக்குப் பிறகு நேற்று மாலை மதுரை விமான நிலையத்தில், நயினார் நாகேந்திரன் கூறுகையில், “முதல்வர் வேட்பாளராக எடப்பாடி இருந்தால் கூட்டணி வெற்றிபெறாது என டிடிவி கூறியிருக்கிறார். அவர் இந்த கூட்டணியில் இருந்து வெளியேறுவதற்கு முன், உள்துறை அமைச்சர் யாரை முதலமைச்சர் ஆக சொல்கிறாரோ அவரை நாங்கள் ஏற்போம். பிரசாரம் செய்வோம் என்றார். அதன் பிறகு கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டார்.

அதற்கடுத்து இந்த கருத்தை சொல்லி இருக்கிறார். கூட்டணி தொடர்பாக அவர் தான் தீர்மானிக்க வேண்டும். மக்கள்தான் முடிவு செய்வார்கள். மற்றபடி தனிப்பட்ட யாராலும் தோல்வி என்பதற்கு ஜோசியம் தான் சொல்ல முடியும். வரும்போது கூட ஓபிஎஸ்சிடம் போனில் பேசினேன். எங்களின் உறவு நன்றாகத்தான் உள்ளது. தேவைப்பட்டால் டிடிவியிடமும் பேசுவேன். அதிமுக பெரிய கட்சி. தேசிய ஜனநாயக கூட்டணியின் தமிழக தலைவர் எடப்பாடி. நிச்சயம் தேர்தலில் போட்டியிட்டு தேஜ கூட்டணி ஆட்சிக்கு வரும். இவ்வாறு கூறினார். (ஐ)

# படைப்புக்கள் காட்டும் காலத்தின் கண்ணாடி

கலைகள் பல வகைகளில் பல விதங்களில் வாசகர்களை அல்லது இரசிகர்களை மகிழ்விக்கின்றன. அவைகள் கலைகளாகவும் உரையாடல் களாகவும், காட்சிகளாகவும், பாட்டுக்களாகவும், கூத்துக்களாகவும், நாடகங் களாகவும் பல வடிவங்களில் காண்பவர்க்கு அல்லது கேட்பவர்க்கு பரவசத்தை அளிக்கிறது


நம் தமிழ் இலக்கியத்தில் படைப்புக்களான, கவிதை, கட்டுரை நாடகம் சிறுகதை, நாவல், குறுங்கதை இப்படி சொல்லிக்கொண்டே போகலாம், இவைகள் நம் மனதுக்கு தரும் மகிழ்ச்சிக்கு அளவுதான் ஏது?

சிறுகதைகள், கதைகள், காலத்தின் கண்ணாடிகள் என்று சொல்லலாம். அன்றைய காலகட்டத்தில் நிகழ்ந்த சிறு சிறு சம்பவங்கள், சிறுகதைகளாக உருவாக்கம் ஆகிறது. அதை படைக்கும் எழுத்தாளன் வாசகர்களை அன்றைய கால கட்டத்துக்கு, கதையை வாசிப்பதின் மூலம் அழைத்து செல்கிறான்.

தமிழ் இலக்கியத்தில் கதைகள் உருவான காலந்தொட்டு வாசிப்பு பழக்கத்தை தலைமுறை வாசிப்பின் மூலமாகவோ அல்லது தாங்களாகவே வாசிப்பை மேற்கொண்டு இருப்பவர்களோ, இந்த சிறு கதைகளை வாசிக்கும் போது அன்றைய காலகட்டத்தில் சமூக சூழ்நிலை எப்படி இருந்தது? ஏன் காலத்தின் (இயற்கை) சூழ்நிலைகளை கூட எப்படி இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது அல்லவா?








உதாரணமாக இரண்டு மூன்று நூற்றாண்டு முன்னால் இருந்த காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளையோ அல்லது சாதாரண மனிதர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்சிகள், அது காதலாகவும் , சண்டையாகவும், வஞ்சகங்களாகவும், நட்பாகவும் இருக்கலாம் இப்படி அன்றைய கால கட்டத்தில் மனித உணர்வுகளால் நடக்கும் நிகழ்ச்சிகளை, சிறுகதைகளாக்கி தரும் படைப்பாளனின் கதைகளை வாசிக்கும் வாசகன் கண் முன்னால் அன்றைய காலகட்டத்தில் எப்படி இருந்தது சமூக வாழ்க்கை, இயற்கையின் செயல்பாடு போன்றவைகளை அறிய முடிகிறது. அதனால் சிறுகதைகளை ஒவ்வொரு காலத்தின் சூழ்நிலைகளை காட்டும் கண்ணாடி என்பதில் தவறேது?

நம் இலக்கியத்தில் சமூக வாழ்க்கையை பற்றிய சிறுகதைகள் இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகத்தான் வெளி வந்து கொண்டிருக்கிறது. இது படைப்பாளிகளின் தவறா? என்று கேட்டால் பதில் சொல்ல முடியாத சூழ்நிலை. காரணம் தமிழில் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் தொட்டுத்தான் அன்றைய சமூக வாழ்க்கையின் நிகழ்வுகள் கதையாக்கப்பட்டிருக்கிறது என்று கருதலாம்.

அதற்கு முன்னால் நூல் வடிவில் வராவிட்டாலும் செவி வாயிலாக பல ஊர்களுக்கும், நாடுகளுக்கும், படைப்பாளிகள் மூலமாக சிறு கதைகளாக, பாட்டுக்களாக, கூத்துக்களாக வெளி கொணர்ந்திருக்கலாம். என்றாலும் அவைகள் காலம் தொட்டு நகர்வுகளாக நகர்ந்து நகர்ந்து நமக்கு கிடைக்கும் போது நூல் வடிவில் மட்டுமே சமூகத்தின் வாழ்வியலை அறிந்து கொள்ள முடிகிறது. அதனால் படைப்பாளிகளை நாம் எங்கனம் குறை சொல்ல முடியும்?

அப்படி வாய் வழியாக செவிவழியாக வெளி வந்த படைப்புகள் இன்றைய காலகட்டத்தில், ஏதோ ஒரு விதத்தில் நமக்கு கிடைக்கும் போது (உ..ம் ஒலி, ஒளி புகைப்படம், சித்திரங்கள்) அவைகள் புராணங்களாகவோ, அல்லது அரசமார்களின் வாழ்க்கைகளையோ, முழுக்க முழுக்க பக்தி மார்க்கமாகவோ மட்டுமே நமக்கு காட்டப்பட்டு கொண்டிருக்கிறது, நம்மால் ஏதோ ஒரு அரசரின் கீழ் ஆண்டு கொண்டிருந்த காலத்தில், அந்த நாட்டில் வாழ்ந்த நம்மை போன்ற சாதாரண மக்களின் வாழ்க்கையை பற்றி அறிய முடியாமல் போய் விடுகிறது. இது ஒரு ஏமாற்றமான செய்திதான்.



இருந்தாலும் அன்றைய காலகட்டத்தில் வில்லுப்பாட்டு, கதா கலாட் சேபம், கூத்துக்கள், செய்யுள்கள், பாடல்கள் போன்றவை ஊர் ஊராக, நாடு நாடாக கலைஞர்களால் வெளிக்கொணரப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவைகள் முன்னர் சொன்ன கேட்க வரும் பாமர மக்களை ஏதோ ஒரு அதி தீவிர நிலையிலேயே காண்பிக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்காத கருத்தாக சிலருக்கு தோன்றலாம். ஆனால் ஏன் அப்படி சொல்லப்படுகிறது? என்றால் பக்தியினால் மட்டுமே என்னும் ஒரு வித மயக்க நிலை புராணக்கதைகள் மூலம் மக்களிடையே பரவியது. அடுத்து இராஜ நம்பிக்கை, இந்த நாட்டின் ராஜாதான் நமக்கு எல்லாம் என்னும் வகையில் ஆடல் பாடலாக, மக்களுக்கு தீவிர நம்பிக்கை வைக்கும் வண்ணம் காட்டப்பட்டு கொண்டிருந்திருக்கிறது.

ஒரு ஏழை, அல்லது நடுத்தர, ஓரளவு உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை, அன்றாட பிழைப்பு, அவர்களுக்குள் ஏற்படும் காதல், சண்டை, துரோகம், போன்றவைகள் எதுவும் நம்மால் அறிய முடிவதில்லை. அதே நேரத்தில் அந்த காலகட்ட ராஜாக்களின், காதல், வீரம், போன்ற வாழ்க்கையை மட்டும் அறியமுடிகிறது. இது ஏமாற்றமில்லையா?

இலக்கியம் என்பதே சாதாரணமக்களின் வாழ்க்கை தரத்தையும், முறையையும் வாசகனுக்கு கடத்துவதும், அறிய வைப்பதும் அதன் பணிதான். ஆனால் பக்தி, அரசு, அரசாங்கத்தின் மீது அளவுக்கு மீறிய விசுவாசம், அரசர்களின் வீரம், போர், காதல் போன்றவைகளை மட்டும் நமக்கு காட்சிப்படுத்தி, செவிப்படுத்தி இவைகள் மட்டும்தான் இலக்கியமா? என்னும் கேள்வியை நமக்குள் விதைக்கிறது.

கடைசியாக ஒரு சின்ன உதாரணம் சொல்லுவதென்றால் போன நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதர்களின் சமூக வாழ்க்கையை புதுமைபித்தன், காட்டுகிறார். அதை வாசிக்கும் நாம் அன்றைய கால கட்ட சூழ்நிலைக்குள் சென்று விடுகிறோம் அல்லவா?



அடுத்து ஜெயகாந்தன், அசோகமித்திரன், க.ந.சு ப, கு.பா, அழகிரிசாமி இப்படி பல பல எழுத்தாளர்களால், அந்தந்த காலகட்டத்தின் சமூக வாழ்க்கை முறையை, சிறுகதை, நாவல்கள், நாடகங்கள், போன்றவைகளால் நம் கண் முன்னால் கொண்டு வந்து அதன் மூலம் நமக்கு காட்டுகிறார்கள்.

அப்படி அன்றைய காலகட்ட சமூக வாழ்க்கையில் மனிதர்களின் வாழ்க்கையை நாம் வாசிக்கும்போதோ, கேட்கும்போதோ, அன்னைக்கு தங்கம் பவுனு இரண்டு ரூபா, அஞ்சு ரூபா, பத்து ரூபா..! இப்படி சொல்லி பெருமூச்சு விட்டாலும் மனதுக்குள் ஒரு சின்ன சந்தோசம் நூழிலையாய் ஓடி ஏதோ நாமே அந்த நகைகளை வாங்கியது போல மகிழ்ந்துதான் போகிறோம்.

அதை விடுங்கள் அன்னைக்கெல்லாம் இரண்டு ரூபா எடுத்துட்டு போனா இரண்டு பை நிறையா மளிகை சாமான் வாங்கிட்டு வரலாம்" இந்த மாதிரி அன்றைய நிகழ்வுகளை கேட்கும்போதோ, வாசிக்கும்போதோ நமக்குள் தோன்றும் ஒரு ஏக்கம்..? அதுதான் சார் ஒவ்வொரு காலகட்டத்தில் படைக்கப்படும் படைப்புக்கள் காட்டும் காலத்தின் கண்ணாடி

# நேபாளத்தில் இடைக்கால ஆட்சி அமைப்பது யார்? ராணுவ தலைமை அலுவலகத்தில் ஆலோசனை



சர்மா ஒலி பதவி விலகியதை தொடர்ந்து நேபாளத்தில் புதிய ஆட்சி அமைப்பது தொடர்பாக ராணுவ தலைமை அலுவலகத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது. நேபாளத்தில் இணையதள தடை மற்றும் ஊழல் ஆட்சிக்கு எதிராக ஜென் இசட் என்ற இளம் தலைமுறை போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இதையடுத்து கடந்த செவ்வாய்கிழமை பிரதமர் கே.பி.சர்மா ஒலி பதவி விலகினார். இதுவரை வன்முறைக்கு 30 பேர் பலியாகி விட்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். தற்போது நேபாளத்தில் ராணுவம் பாதுகாப்பு பணியை மேற்கொண்டுள்ளது. வீதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மெதுவாக அமைதி திரும்பி உள்ளது. இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட ஜென் இசட் குழுவின் பிரதிநிதிகளை இடைக்கால அரசு அமைக்க ராணுவம் அழைத்துள்ளது. இந்த அழைப்பை ஏற்று சென்றுள்ள' ஜென் இசட்' குழுவின் பிரதிநிதிகளுடன் நேபாள ஜனாதிபதி ராமச்சந்திர பவ்டேல் மற்றும் ராணுவத் தலைவர் அசோக் ராஜ் சிக்டெல் ஆகியோர் நேற்று பத்ரகாளியில் உள்ள ராணுவத் தலைமையகத்தில் இடைக்கால அரசாங்கத்தை நடத்துவதற்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக பேச்சுவார்த்தை நடத்தினர்.

முன்னாள் தலைமை நீதிபதி சுஷிலா கார்கி, காத்மாண்டு மேயர் பாலேந்திர ஷா,நேபாள மின்சார ஆணையத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி குல்மான் கிசிங் மற்றும் சம்பாங்கின் மேயர் தரன் ஹர்கா ஆகியோரது பெயர்கள் இடைக்கால அரசாங்கத்தை வழிநடத்த பரிசீலிக்கப்படுவதாக ஜென் இசட் குழுவினர் தெரிவித்தனர். இதுதொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக ராணுவ செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார். இருப்பினும், அவர் எந்த பெயர்களையும் வழங்கவில்லை.

அவர் கூறுகையில்,'நாங்கள் வெவ்வேறு குழுவினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம். தற்போதைய முட்டுக்கட்டையிலிருந்து வெளியேறுவதற்கான வழியைக் கண்டுபிடிப்பதிலும், அதே நேரத்தில் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பராமரிப்பதிலும் பேச்சுவார்த்தைகள் முக்கியமாக கவனம் செலுத்துகின்றன' என்று ராணுவ செய்தித் தொடர்பாளர் கூறினார். ராணுவ தலைமை அலுவலகத்தில் இந்த கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது முடிவைக் கேட்க ராணுவத் தலைமையகத்திற்கு வெளியே ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். இந்த கூட்டத்தின் முடிவில் தேர்வு செய்யப்படும் புதிய இடைக்கால தலைவர் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நேபாளத்தில் தேர்தல் நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் படிப்படியாக இயல்பு நிலை திரும்பி வருகிறது. இருப்பினும் காத்மாண்டு பள்ளத்தாக்கின் மூன்று மாவட்டங்களில் மட்டும் தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டது. மற்ற பகுதிகளில் அத்தியாவசியப் பணிகளைச் செய்ய பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நேபாள சிறைகளில் இருந்து தப்பி இந்திய எல்லைக்கு வந்த சுமார் 60 கைதிகளை இந்திய எல்லைக்காவல்படையான சாஸ்திர சீமாபால் படையினர் கைது செய்துள்ளனர். உபி, பீகார், மேற்குவங்க எல்கைகளில் அவர்கள் சிக்கி உள்ளனர். இவர்களில் 3 பேர் இந்தியர்கள் என்று தெரிய வந்துள்ளது.

யார், யார்?

1. முன்னாள் தலைமை நீதிபதி சுஷிலா கார்க்கி
2. காத்மாண்டு மேயர் பாலன் ஷா
3. நேபாள மின்சார ஆணையத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் குல்மான் கிசிங்
4. சம்பாங்கின் மேயர் தரன் ஹர்கா

சிறையில் மோதல் 3 கைதிகள் பலி 15 ஆயிரம் பேர் தப்பினர்

நேபாள சிறையில் பாதுகாப்புப் படையினருடனான மோதலில் குறைந்தது 3 கைதிகள் இறந்தனர். 15,000க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பினர். நேற்று காலை மாதேஷ் மாகாணத்தில் உள்ள ராமேச்சாப் மாவட்ட சிறையில் கைதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட வன்முறை மோதலில் 3 கைதிகள் கொல்லப்பட்டனர். 13 பேர் காயமடைந்தனர். கைதிகள் கேஸ் சிலிண்டரை வெடிக்கச்செய்து சிறையிலிருந்து வெளியேற முயன்றபோது மோதல் தொடங்கியது. இதே போல் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் ஏற்பட்ட மோதல்கள் மூலம் 15,000க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடிவிட்டதாக முதற்கட்ட தகவல்கள் உறுதிப்படுத்தின. காஸ்கி மாவட்ட சிறைச்சாலையில் 773 பேர் தப்பியோடியதாக சிறை அதிகாரி ராஜேந்திர சர்மா தெரிவித்தார். தப்பியோடியவர்களில் 13 இந்தியர்கள் மற்றும் 4 வெளிநாட்டினர் அடங்குவர்.

நேபாளத்தில் புதிய இடைக்கால அரசு அமைப்பதில் இரண்டு நாளாக நடக்கும் பேச்சுவார்த்தையில் இழுபறி நீடிப்பது ஏன் என்பது குறித்து புதிய தகவல் வெளியாகி உள்ளது. ஜென் இசட் குழுவினர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அரசியலமைப்பைத் திருத்த வேண்டும் என்று கூறியதுதான் இழுபறி நீடிப்பதற்கு காரணம் என்று தெரிய வந்துள்ளது. இதுகுறித்து ஜென் இசட் குழுவின் பிரதிநிதிகளான திவாகர் தங்கல், அமித் பனியா மற்றும் ஜ/னல் தங்கல் ஆகியோர் கூறுகையில்,' இது முற்றிலும் ஒரு மக்கள் இயக்கம். இதை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்காதீர்கள். நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். மக்களின் மனநிலைக்கு ஏற்ப அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். நாங்கள் அரசியலமைப்பை அகற்ற விரும்பவில்லை. ஆனால் மக்களின் கவலைகளை உள்ளடக்கிய சில முக்கிய திருத்தங்களை நாங்கள் விரும்புகிறோம்' என்றனர். (ஐ)

# அமெரிக்காவில் இந்திய வம்சாவளி தலை துண்டித்து கொலை




அமெரிக்காவில் உணவகத்தில் மேலாளராக பணிபுரிந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் தலை துண்டித்துக் கொலை செய்யப்பட்டார். மனைவி, மகன் கண் முன்பே 50 வயதான இந்திய வழ்சாவளியை உணவக ஊழியர் கொலை செய்தார். டெக்சாஸில் வாஷிங் மெஷின் தொடர்பான பிரச்சனையில் கொலை நடந்ததாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இந்திய வம்சாவளியை கொலை செய்த நபருக்கு ஏற்கனவே குற்றப்பின்னணி உள்ளதாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர் .(ஐ)

# டிரம்ப்ஆதரவாளர் கொலை தகவல் தந்தால் 1 லட்சம் டாலர்: எப்.பி.ஐ அறிவிப்பு



டிரம்ப் ஆதரவாளர் சார்லி கிர்க்கை கொன்ற கொலையாளி குறித்து தகவல் கொடுத்தால் 1 லட்சம் டாலர் வழங்கப்படும் என எப்.பி.ஐ அறிவித்துள்ளது. உட்டா வேலி பல்கலைக்கழக நிகழ்ச்சியில் பங்கேற்றபோது சார்லி கிர்க் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சீனத் தூதுவர் நேற்று சந்தித்து கலந்துரையாடி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பு நாடுகளைக் கோரியுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

"பொறுப்புக்கூறலுக்கான ஆக்கபூர்வமான செயல்முறையை இலங்கை அரசாங்கத்திடம்வலியுத்துவதன் மூலம் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளக பொறிமுறைக்கான இடைவெளியை வழங்குவதானது, அத்தகைய உள்ளகப் பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியின் பின்னணியில் அச்சுறுத்தலானதொரு நிலையையே தோற்றுவிக்கும்.

சுயாதீன சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபைமீதான நம்பிக்கையில் சரிவு ஏற்படவும் - தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதற்குமே வழிகோலும்.

மேலும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான உள்ளக மற்றும் கலப்பு பொறிமுறைகளை முற்றாக நிராகரிக்கிறோம். இனவழிப்புப் பிரகடனத்தின்கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்." - என்றும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

## குளவிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னர் விறகு சேகரிக்கச் சென்ற 70 வயது மதிக்கத்தக்க பெண்ணே குளவிக் கொட்டுக்கு இலக்கானார்.

அவர் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

## எல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடமையாற்றிய 12 ஊழியர்களும் அடங்கு கின்றனர். இந்நிலையில், விபத்தில் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட தங்காலை நகர சபையின் பெண் ஊழியர் ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார். அதன்படி, எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற

பஸ் விபத்தில் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

## விஜேராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைமையைப் பார்த்து நிச்சயம் மகிழ்ச்சியடைந்திருப்பார்.

எனினும், காட்டில் இருந்தாலும், நகரில் இருந்தாலும் சிங்கம் சிங்கம்தான். மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்குரிய பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்." - என்றார்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ நேற்று அரச மாளிகையில் இருந்து வெளியேறினாலும், அரசுக்குரிய சொத்துக்களைக் கையளிப்பதற்கு ஒரு வாரம் அவகாசம் கோரப்பட்டுள்ளது.

## அநுரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் இருந்து தங்காலைக்கு மஹிந்த ராஜபக்ஷ வெளியேற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"செப்டம்பர் 11 என்பது உலகில் பலம் பொருந்திய நாட்டுக்கும் பயங்கரவாதத்தின் அச்சம் தென்பட்ட நாளாகும். செப்டம்பர் 11 தாக்குதல் நடந்த நாளாகும்.

பயங்கரவாதிகளிடம்இருந்து இலங்கையைப்பாதுகாத்த தலைவர் இப்படியானதொரு நாளில் அதிகாரபூர்வ வதிவிடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஓய்வுபெற்ற பின்னர் அவருக்கு இந்த வீட்டை (விஜேராம) வழங்குமாறு நான் யோசனை முன்வைக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெறப்போவதில்லை. தங்காலையில் இருந்துதான் அவரது பயணம் ஆரம்பமானது. எனவே, அங்கிருந்து புதிய பயணம்கூட ஆரம்பமாகலாம்.

அநுரவின் அரசியல் அழுத்தங்களுக்கு நாம் அஞ்சவில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அல்ல அதற்கு மேல் இருந்தாலும் அரசியல் அச்சுறுத் தல்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை." - என்றார்.

# அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக கபீர் ஹாசிம் தெரிவு!

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராகப் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் கடந்த ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதி அப்பதவியை இராஜினாமா செய்திருந்தார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் இன்றையதினம் (12) கூடிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றது. அதன்படி பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக கபீர் ஹாசிம் தெரிவு செய்யப்பட்டார். அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து புதிய தலைவர் கபீர் ஹாசிம் கருத்து தெரிவிக்கையில், அரசியல் கருத்து வேறுபாடுகள் இன்றி நடுநிலையாகச் செற்பட்ட, சகல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தனது பதவியை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன், முன்னாள் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் அவர்களின் பணிகளைப் பாராட்டியதுடன், அவர் மேற்கொண்ட பணியை தொடர்ச்சியாக எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகப் புதிய தலைவர் குறிப்பிட்டார். புதிய திட்டங்களை வகுப்பதன் மூலம் கோபா குழுவின் பங்கை மேலும் நெறிப்படுத்தவும் பராமரிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாக புதிய தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குழுக் கூட்டத்தில் பிரதியமைச்சர் சுதத் திலகரத்ன, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, ஜே.சி.அலவத்துவல, ரோஹித்த அபேகுணவர்தன, ஹெக்டர் அப்புஹாமி, சாமர சம்பத் தசநாயக்க, (வைத்தியர்) காவிந்த ஹேஷான் ஜயவர்தன, ஒஷானி உமங்கா, ருவன்திலக ஜயகொடி, (சட்டத்தரணி) துஷாரி ஜயசிங்ஹ, எம். ஏ. எம். தாஹிர், லால் பிரேமநாத், சானக மாதுகொட ஆகியோரும், பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும், தொடர்பாடல் பதில் பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேரா முதலானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சந்திரசேகருக்கு அர்ச்சுனா சவால்

கொழும்பு, செப். 12

"மீன்பிடித்துறை அமைச்சராக இ.சந்திரசேகர் வந்தபின் கரைவலை மற்றும் சுருக்குவலை போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் எடுத்த நடவடிக்கை என்ன? நீங்கள் செய்த ஊழல்களை நான் வெளிப்படுத்தினால் அமைச்சுப் பதவியைத் துறப்பீர்களா?" - என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா கேள்வி எழுப்பியுள்ளார். நேற்று நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கடற்றொழில் அமைச்சின் கீழ் பல ஊழல் குற்றச்சாட்டுகள் பொதுமக்களால் முன்வைக்கப்படுகின்ற போதும் அமைச்சர் சந்திரசேகர் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக் காதது ஏன்?

நீரியல் வளங்கள் துறை அமைச்சராக சந்திரசேகர் பொறுப்பேற்ற பின் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் குறித்து கரிசனை கொள்ளவில்லை என்பது மக்களது முறைப்பாடாகும்.

இதுவரை குறித்த அமைச்சின் கீழ் பதியப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதை தெளிவுபடுத்த முடியுமா?, கடல் அட்டை பண்ணை விவகாரத்திலும் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என்று மக்கள் முறையிடுகின்றனர். இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் தங்களின் பினாமிகளின் பெயரில் கையூட்டல் இடம்பெறுகின்றது.

இதற்கான ஆதாரங்களை சபையில் சமர்ப்பித்தால் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா? குறிப்பாக, அமைச்சர் சந்திரசேகர் அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் வடக்கு மாகாண கடற்றொழில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் குறித்த விவரங்களை வெளிப்படுத்த முடியுமா? அமைச்சர் சந்திரசேகர் மீது ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் பதவி விலகத் தயாரா?" - என்று அர்ச்சுனா எம்.பி. கேட்டார்

இந்நிலையில் அர்ச்சுனா எம்.பியால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வேண்டும் என்று அமைச்சர் சந்திரசேகர் நாடாளுமன்றில் பதில் அளித்தார்

# 1,60,200 கர்ப்பிணிகளுக்கு உணவுப் பொதி

நாட்டில் உள்ள 1,60,200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5,000 ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.இதற்காக அரசாங்கம் 1,500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என தெரிவித்த சிறுவர் மற்றும் மகளிர் விவகாரஅமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ், இந்த திட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம் பெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாதத்தில் புத்தாண்டு காலத் தில் மக்களுக்கு வழங்கப்படும் அஸ்வெசும மூலம் நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு போசாக்கான உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் அப்போது உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் காலம் என்பதால் தேர்தல் ஆணையாளரின் உத்தரவுக்கு இணங்க அந்த கொடுப்பனவு வழங்குவதை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிகப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் காலங்களில் இவ்வாறு ஒதுக்கப்பட்டு இடையில் நிறுத்தி வைக்கப்பட்ட நிதி அப்போதைய அமைச்சர்கள், ஜனாதிபதிக்கும் போய் சேர்ந்துள்ளது. அந்த வகையில் எமது அரசாங்கம் எப்போதும் மக்கள் நலனுக்கு முன்னுரிமையளித்து செயற்படுகின்றது . சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினூடாக நாட்டில் வாழ்கின்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கர்ப்ப காலத்தில் ஆறு மாதங்களுக்கும் அதன் பின்னர் பாலூட்டும் காலங்களில் நான்கு மாதங்களுக்குமாக 10 மாதங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.அந்த வகையில் டிசம்பர் மாதத்தில் 5000 ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

1,60,200கர்ப்பிணிகளை தெரிவு செய்து அவர்களுக்கு 5000 ரூபாய் பெறுமதியான உணவுப் பொதியை வழங்குவதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. 2 லட்சத்துக்கு 80 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் நாட்டில் தற்போது உள்ளனர்.அவர்களில் மந்த போசனத்தோடு காணப்படும் தாய்மாரை முக்கியமாக தெரிவு செய்து உணவுப் பொதியை வழங்க நடவடிக்கை எடுப்போம் என்றார். (ஐ)

# சட்டவிரோதமாக பாம்புகளை நாட்டிற்குள் கொண்டு வந்த பெண் கைது!

சட்டவிரோதமாக பாம்புகளை நாட்டிற்குள் கொண்டு வந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - வாழைத்தோட்டம் பகுதியை சேர்ந்த 40 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, கலாச்சார மற்றும் தேசிய பாரம்பரியப் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைக்கபெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் பசுமை வழித்தடம் வழியாக 06 பாம்புகளை சட்டவிரோதமாக வெளியேற்ற முயன்ற வேளையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டார். குறித்த பெண் தாய்லாந்தின் பெங்கொக்கில் இருந்து இந்தப்பாம்புகளை கொள்வனவு செய்து, அவற்றை தான்கொண்டுவந்த இரண்டு பயணப் பொதிகளில் சூட்சுமமாக மறைத்து வைத்து நாட்டுக்கு எடுத்து வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

**Speckled Kingsnake Yellow Anaconda> Honduran Milk Snakes Ball Python** உள்ளிட்ட பல்வேறு இனங்களைச் சேர்ந்த 06 பாம்புகளை அவர் சட்டவிரோதமாக எடுத்து வந்துள்ளார்.

இந்த பாம்புகள் குறித்த பெண்ணால் விற்பனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான பாம்புகள் நாட்டின்காட்டுப்பகுதிகளில்விடுவித்தால் நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்பில் கடுமையான பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இதுபோன்ற உயிரினங்களை விமானத்தில் கொண்டு வருவது மிகவும் ஆபத்தான செயல் என்பதுடன், சட்டவிரோதமானது எனவும் எச்சரித்தனர்.

மேலும் விலங்குகளை கொண்டு வந்த இண்டிகோ ஏர் லைன்ஸ் அதிகாரிகளை சுங்க அதிகாரிகள் அழைத்து, இது குறித்து கடுமையான எச்சரிக்கை விடுத்து, சுங்க விசாரணைக்குப் பிறகு பாம்புகளை மீண்டும் கொண்டு செல்ல உத்தரவிட்டுள்ளனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2025 வெளியிடப்பெற்றது.